இ.கு. (TG) – நி. வி. செ. வரிசை (FAME Series)
(இலக்கு குழு நிதி விழிப்புணர்வு செய்திகள்)




# விவசாயிகள்



# நிதிக் கல்வி

நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத் துறை, இந்திய ரிசர்வ் வங்கி

### செய்தி 1

விவசாயிகள் கடன் அட்டை திட்டம் (KCC) - முதன்மையாகப் பயிர் கடன் தேவைகள் மற்றும் ஓரளவு நுகர்வுத் தேவைகளுக்காக

### செய்தி 2

பயிர்க் கடன்களை உரிய நேரத்தில் திருப்பித் தருவதால் உள்ள நன்மைகள்

### செய்தி 3

கட்டுப்படியாகாத விலையில் விளைபொருட்களை விற்பதைத் தவிர்க்கவும் - கிடங்கு ரசீதுகளைப் பயன்படுத்தி நிதி உதவி பெறுதல்

### செய்தி 4

பயிர்க் காப்பீடு - பிரதான மந்திரி ஃபசல் பீமா யோஜனா (PMFBY)

### செய்தி 5

இயற்கைச் சீற்றங்களினால் உங்கள் பயிர்கள் நாசமடைந்தாலும் நம்பிக்கையை இழக்காதீர்கள் - பயிர் சாகுபடியில் நேரிட்ட இழப்பின் அளவை உங்கள் வங்கியிடம் தெரிவித்து உரிய உதவியைப் பெறுங்கள்



விவசாயிகள்
கடன் அட்டை திட்டம் (KCC) -
முதன்மையாகப் பயிர் கடன்
தேவைகள் மற்றும் ஓரளவு
நுகர்வுத் தேவைகளுக்காக

மிகக் குறைந்த விலையில்
விளைபொருட்களை விற்பதைத்
தவிர்க்கவும் - உங்களின்
கிடங்கு ரசீதுகளைப்#
பயன்படுத்தி அறுவடைக்குப்
பிறகு உரிய நிதி உதவி பெறுதல்

பயிர் கடன்களை உரிய
நேரத்தில் திருப்பித் தருவதால்
பல நன்மைகள் உள்ளன -
வட்டி குறைப்புத் திட்டம்*



இயற்கைச் சீற்றங்களினால் உங்கள்
பயிர்கள் நாசமடைந்தாலும்
நம்பிக்கையை இழக்காதீர்கள் -
பயிர் சாகுபடியில் நேரிட்ட இழப்பின்
அளவை உங்கள் வங்கியிடம்
தெரிவித்து உங்கள் கடன் கணக்கைத்
திருத்தியமைத்து நிதி உதவி பெறுங்கள்.

பயிர்க் காப்பீடு செய்து
உங்களைப் பாதுகாத்துக்
கொள்ளுங்கள் -
பிரதான மந்திரி ஃபஸல் பீமா யோஜனா
(PMFBY) திட்டம்
மூலம் பயிர்க் காப்பீடு.

* அவ்வப்போது இந்திய அரசு அறிவித்தது போல்
# சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு மட்டுமே

## செய்தி 1 – விவசாயிகள் கடன் அட்டை திட்டம் (KCC) - முதன்மையாகப் பயிர் கடன் தேவைகள் மற்றும் ஓரளவு நுகர்வுத் தேவைகளுக்காக

விவசாயிகள் தங்களின் உற்பத்தி கடன் தேவைகளைப் (சாகுபடி செலவினங்கள்) பூர்த்தி செய்யப் போதுமான கடன் வசதிகளை உரிய நேரத்தில் வழங்குவதோடு, எதிர்பாராத செலவினங்களைச் சமாளிக்கவும், விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்கான செலவுகளை எதிர்கொள்ளவும், எளிய செயல்முறையின் மூலம் தேவைப்படும்போது கடன் வசதி அளிப்பதை KCC திட்டம் நோக்கமாகக் கொண்டுள்ளது.

1



பயிர் சாகுபடிக்குத் தேவையான குறுகிய கால கடன் தேவைகளை பூர்த்தி செய்தல்

2



அறுவடைக்குப் பிந்தைய செலவுகள்.

3



விளைபொருட்களைச் சந்தைபடுத்துவதற்காக கடன்




4



பண்ணை சொத்துக்கள் பராமரிப்பு மற்றும் விவசாயம் சார்ந்த நடவடிக்கைகள் – உதாரணமாக பால் தரும் கால்நடைகள், மீன் வளர்ப்பு போன்றவற்றிற்கான செயல் மூலதனம்

5



விவசாயிகளின் வீட்டு நுகர்வு தேவைகள்


6



விவசாயம் மற்றும் சம்பந்தப்பட்ட நடவடிக்கைகளுக்குத் தேவையான – முதலீட்டுக் கடன்
உ–ம். பம்பு செட்டுகள், தெளிப்பான்கள், பால் தரும் கால்நடைகள் ஆகியவற்றிற்கான முதலீட்டுக் கடன் தேவைகள்

குறிப்பு: மேலே 1 முதல் 5 வரையான கூறுகள் மொத்தமாக குறுகிய கால கடன் வரம்பு பகுதியாகும். மற்றும் 6-ல் உள்ள உபகரணங்களின் மொத்தத்தொகை நீண்ட கால கடன் வரம்பு பகுதியாக அமைக்கப்படும்

KCC-ல் உள்ள குறுகிய கால வரம்பில் 10% வீட்டு நுகர்வு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படலாம், நுகர்வு செலவினத்திற்காக கூடுதல் நிதியை பயன் படுத்த வேண்டாம்.




## ஏன்?

KCC-ன் நோக்கம் உங்களது பயிர்க் கடன் தேவைகளை பூர்த்தி செய்வதுதான். KCC நிதிகளிலிருந்து வீட்டு செலவினங்களுக்காக பெரிய தொகை செலவிடப்பட்டால், அது உங்களின் வருவாய் உருவாக்கும் திறனை பாதிக்கும். உங்கள் பண்ணை நடவடிக்கைகளிலிருந்து வரும் வருமானம் KCC யின் கீழ் உள்ள கடன்களை திருப்பிச் செலுத்த உங்களுக்கு உதவுகிறது. நீங்கள் பயிர் நடவடிக்கைகளிலிருந்து நிதியை மற்ற செலவுகளுக்கு பயன்படுத்தி விட்டால், உங்கள் கடனைத் திருப்பிச் செலுத்தும் நிலையில் நீங்கள் இருக்க மாட்டீர்கள்.



## விவசாயிகள் கடன் அட்டையின் (KCC) அம்சங்கள்

1 KCC கடனாளிகளுக்கு ஒரு ஏடிஎம் - கம் டெபிட் அட்டையை அளிப்பார்கள். இந்த அட்டையைப் பயன்படுத்தி ஏ.டி.எம்மிலிருந்து KCC கணக்குகளில் உள்ள பணத்தை எடுக்க முடியும். PoS முனையங்கள் மூலமாக பணம் செலுத்தும் வசதியைப் பெறமுடியும்.

2 KCC ஆனது சுழற்சிக் கணக்கின் தன்மையில் இருக்கும். கணக்கில் வரவுத் தொகை இருப்பிலிருந்தால், அதன்மீது சேமிப்பு வங்கிக் கணக்கு விகிதத்தில் வட்டி கிடைக்கும்.

கடன் வரம்பு ₹1 லட்சம் வரையுள்ள கணக்குகளுக்கு இணைப் பிணையம் தேவையில்லை.

### செய்தி 2 - பயிர்க் கடன்களை உரிய நேரத்தில் திருப்பித் தருவதால் பல நன்மைகள் உள்ளன

வங்கியிலிருந்து கடன் வாங்குதல்




2017-18 ஆண்டுகாலத்தில் வாங்கப்பட்ட ₹3 லட்சம் வரையுள்ள குறுகிய காலப் பயிர்க் கடன்களுக்கான வட்டி விகிதம் 4%. (அவ்வப்போது இந்திய அரசு அறிவித்த வட்டி மானியத் திட்டங்கள்) *

பதிவு செய்யப்படாத நிறுவனங்கள் / அடகுக் கடைக்காரர்களிடமிருந்து கடன் வாங்குதல்



அதிக வட்டி விகிதத்திற்கு, பிணையம் தேவைப்படலாம் அல்லது தேவைப்படாமலும் இருக்கலாம்

உரிய காலத்தில் கடன் மற்றும் வட்டியைத் திருப்பிச் செலுத்துவதில் அனுகூலம்



- கடன் மதிப்பெண் முன்னேற்றம்
- அடுத்த முறை அதிக கடன் தொகை பெற வகை
- வட்டி செலவுகள் குறையும்

* 4 சதவிகிதம் வட்டி வசதியைப் பெற, வங்கி குறித்துள்ள தேதிக்குள் விவசாயி கடனைத் திருப்பிச் செலுத்தவேண்டும். எவ்வாறாயினும் இது ஓராண்டுக்கு மேல் நீட்டிக்கப்படாது.

## செய்தி 3 – கட்டுப்படியாகாத விலையில் விளைபொருட்களை விற்பதைத் தவிர்க்கவும் – கிடங்கு ரசீதுகளைப் பயன்படுத்தி நிதி உதவி பெறுதல்

நீங்கள் ஒரு நல்ல அறுவடை செய்தாலும் கூட, உங்களின் வேலை பாதி மட்டுமே முடிவடைந்துள்ளது. உங்கள் மகசூலை நீங்கள் நல்ல விலைக்கு விற்க வேண்டும்.



குறைந்த விலையில் விற்க வேண்டாம்

### கிடங்குகளைப் பயன்படுத்தவும்



உங்களுக்கு நியாயமான விலை கிடைக்கவில்லை என்று நினைத்தால், விளைபொருட்களை கிடங்கில் சேமித்து வைத்து, அந்த ரசீதின்# பேரில் உங்களுடைய உடனடிப் பணத் தேவைக்கு வங்கியிடமிருந்து கடனுதவி பெறலாம். கிடங்குகளில் விளைபொருளை சேமித்து வைத்தைதற்கு அத்தாட்சியாக வழங்கப்படும் மாற்றக் கூடிய ரசீதுகளை அடமானத்தில் வைத்து KCC-தாரர்களாகிய சிறு மற்றும் குறு விவசாயிகளுக்கு அறுவடைக்குப் பிந்திய 6 மாத காலத்திற்கு வட்டி குறைப்பு (அதாவது 7* சதவிகிதம்) மானிய வசதி அளிக்கப்படும்.

* இந்திய அரசின் வட்டிக் குறைப்புத் திட்டம் அவ்வப்போது அறிவிக்கப்படும்.
# WDRA (கிடங்கு வளர்ச்சி மற்றும் நெறிமுறை ஆணையம்)-ன் அங்கீகாரம் பெற்ற கிடங்குகளின் மூலம் வழங்கப்படுகிறது.

## செய்தி 4 – பயிர்க் காப்பீடு – பிரதான மந்திரி ஃபஸல் பீமா யோஜனா (PMFBY)

### ஒருங்கிணைந்த காப்பீட்டு வசதி

பிரதான மந்திரி ஃபஸல் பீமா யோஜனா (PMFBY), மகசூல் மோசமானால், ஏற்படும் நஷ்டத்திற்கு எதிராக காப்பீடு வசதி அளிக்கிறது. இது விவசாயிகளின் வருமானத்தை நிலைப்படுத்த உதவுவதோடு, புதுவிதமான யுக்திகளை, பயன்படுத்தவும் அவர்களை ஊக்குவிக்கிறது.

### குறைந்த விகிதத்தில் பிரீமியம்

பிரதான மந்திரி ஃபஸல் பீமா யோஜனா (PMFBY), விவசாயிகளுக்கு மிக குறைந்த பிரீமியத்தில், ரபிப் பருவப் பயிர்களுக்கு அதிகபட்சமாக காப்பீட்டுத் தொகையில் 1.5 சதவிகித்ததிலும், காரிஃப் பயிர்களுக்கு மற்றும் உணவு பயிர்கள், பருப்பு வகைகள், எண்ணெய் வித்துக்களுக்கு காப்பீட்டுத் தொகையில் 2 சதவிகிதத்திலும், வருடாந்திரத் தோட்டம், வர்த்தகப் பயிர்களுக்கு காப்பீட்டுத் தொகையில் 5 சதவிகித பிரீமியத்திலும் காப்பீட்டு வசதி கிடைக்கும். பயிர் வளர்ச்சிச் சுழற்சியின் அனைத்து நிலைகளிலும், பயிர்களுக்குக் காப்பீடு வசதி கிடைக்கும். சில குறிப்பிட்ட நிகழ்வுகளில் அறுவடைக்குப் பிந்திய நேரிடர்களுக்கும் காப்பீடு வசதி உண்டு.



### பிரீமியத்தில் வித்தியாசம்

பிரீமியத் தொகைக்கும், விவசாயிகள் கட்டவேண்டிய கட்டண விகிதத்திற்கும் இடையேயுள்ள வித்தியாசத் தொகை மத்திய, மாநில அரசுகளால் சரிசமமாகப் பகிர்ந்துகொள்ளப்படும்.

### இயற்கை சீற்றங்களினால் ஏற்படும் இழப்புகளுக்கு எதிரான காப்பீடு

மகசூலில் பின்வரும் இயற்கை சீற்றங்களால் நஷ்டங்கள் ஏற்படலாம். (i) இயற்கையாக ஏற்படும் தீ மற்றும் மின்னல், (ii) புயல், சூறாவளி, ஆலங்கட்டி மழை போன்றவை, (iii) வெள்ளப் பெருக்கு, நிலச்சரிவு, (iv) பஞ்சம், வறட்சி, (v) பூச்சிகள், நோய்கள், அறுவடைக்குப் பிந்தைய நஷ்டங்கள் / உள்ளூரில் குறிப்பாக அடையாளப்படுத்தப்பட்ட சில நிகழ்வுகளால் நேரிடும் நஷ்டங்கள், பெரும்சூறாவளி, நிலச்சரிவு, பயிர்கள் வெள்ளத்தில் மூழ்குதல் – குறிப்பிடப்பட்ட இடங்களில் உள்ள வயல்களில் இத்தகு நிகழ்வுகளால் ஏற்படும் பாதிப்புகள் இத்திட்டத்தின் கீழ் காப்பீடு வசதி பெறுகின்றன.

### மூன்று நிலைகளில் இழப்பீடு

அனைத்துப் பயிர்களுக்கும் மூன்று நிலைகளில் பயிர்களுக்கு ஏற்படும் நேரிடருக்கு ஏற்ப, 70 சதவிகிதம், 80 சதவிகிதம் மற்றும் 90 சதவிகிதம் இழப்பீடு வழங்கப்படும்.

### கடன் வாங்கும் விவசாயிகளுக்கு இது கட்டாயத்தேவை

சில குறிப்பிட்ட பயிர் வகைகளுக்காக பயிர்க கடன்/ KCC கணக்கு வைத்துள்ள விவசாயிகளுக்கு இத்திட்டம் கட்டாயமாக்கப்பட்டுள்ளது. ஆயினும், இதர / கடன் வாங்காத விவசாயிகளும் பயிர் மீது காப்பீடு பெற விரும்பினால், இத்திட்டத்தில் சேரலாம்.



இழப்பீடு = சட்டரீதியான பொறுப்புகள், நஷ்டம் அல்லது நிதிச்சுமைகளுக்கான பாதுகாப்பு

## செய்தி 5 – இயற்கைச் சீற்றங்களினால் உங்கள் பயிர்கள் நாசமடைந்தாலும் நம்பிக்கையை இழக்காதீர்கள் – பயிர் சாகுபடியில் நேரிட்ட இழப்பின் அளவை உங்கள் வங்கியிடம் தெரிவித்து உரிய உதவியைப் பெறுங்கள்




உங்களின் பகுதியை இயற்கைப் பேரழிவுகளால் (உதாரணம் – புயல், வறட்சி, பூகம்பம், நெருப்பு, வெள்ளம், சுனாமி, ஆலங்கட்டி மழை, நிலச் சரிவு, பனிப்பொழிவு, பூச்சிகள் தொல்லை, குளிர் அலைகள்) பாதிக்கப்பட்ட பகுதியாக மத்திய / மாநில அரசு அறிவித்திருந்தால், பயிர் நாசத்தின் அளவு 33% அல்லது அதற்கும் அதிகமாக இருப்பதாக அளவிடப்பட்டால், நீங்கள் உங்களுக்குக் கடன் கொடுத்த வங்கியை அணுகவேண்டியது கட்டாயமாகும். ஏனெனில், இயற்கை சீற்றத்தால் ஏற்பட்ட அழிவுகளால் உங்களின் கடன் அடைக்கும் திறன் பாதிக்கப்பட்டிருக்கும்.

## வங்கி உங்களுக்காக என்ன செய்திடும்?

### குறுகிய காலக்கடன்கள் (பயிர்க் கடன்கள்)

பயிர்கள் நாசமடைந்ததால் ஏற்பட்ட நஷ்டம் 33 முதல் 50 சதவிகிதத்திற்குள் இருக்குமானால், கடனைத் திருப்பித் தரும் கால அளவு அதிகபட்சம் 2 ஆண்டுகளாக (இடைநிறுத்தக் காலம் ஓராண்டையும் சேர்த்து) திருத்தியமைக்கப்படும். நஷ்டத்தின் அளவு 50 சதவிகிதத்திற்கும் அதிகமானால், கடனைத் திருப்பியளிக்கும் கால அளவு அதிகபட்சமாக 5 ஆண்டுகளாகத் (இடைநிறுத்தக் காலம் ஓராண்டையும் சேர்த்து) திருத்தியமைக்கப்படும்.




குறுகியகால கடனின் அசல் மற்றும் வட்டியுடன் சேர்த்து நிலைகாலக் கடன்களாக மாற்றியமைக்கப்படும்.

கடன்கள் மறுசீரமைக்கப்படும் நிகழ்வுகளிலெல்லாம் இடைநிறுத்தக் காலம் ஓராண்டு என்பது அனுசரிக்கப்படும். இவ்வாறு திருத்தியமைக்கப்பட்ட கடன்களுக்கு வங்கிகள் கூடுதல் பிணையத்தை வலியுறுத்துவதில்லை.

**விவசாயக் கடன்கள்** முதலீட்டு நீண்டகாலக் கடன் – இயற்கைச் சீற்றத்தின் தன்மை மற்றும் அளவு, கடனைத் திருப்பியளிக்கும் திறன் இவற்றைப் பொறுத்து, நடப்பிலுள்ள கடன் தவணைகள் தொகை மற்றும் காலம் மாற்றியமைக்கப்படும்.

இயற்கைச் சீற்றங்களால், உங்கள் பயிர்கள் நாசமடைந்தால் அதைப் பற்றி வங்கிக்குத் தெரிவிக்க வேண்டியது உங்களின் கடமையாகும். இவ்வாறு தெரிவித்து வங்கியிடமிருந்து உதவியைப் பெறலாம்.

# குறித்த இலக்குக்கு உரிய நிதியியல் கல்விப் பாடங்கள்

இந்திய ரிசர்வ் வங்கியின் செயல் இயக்குநர் திரு.தீபக் மொஹந்தி அவர்களின் தலைமையில் அமைக்கப்பட்ட "அனைவரையும் உள்ளடக்கிய நிதியியலுக்கான இடைக்கால பாதை" குறித்த குழுவின் பரிந்துரைகளில் ஒன்று பின்வருமாறு - "வெவ்வேறு பிரிவினருக்கு வெவ்வேறுவிதமான நிதியியல் கல்வி தேவைப்படுவதனால், நிதியியல் கல்வியைப் பொறுத்தவரை, "ஒரே அளவு அனைவருக்கும் பொருந்தும்" என்ற கொள்கையின் அடிப்படையிலான அணுகுமுறை சிறந்தது அல்ல. இதன் விளைவாக, ஒவ்வொரு இலக்கு குழுவினருக்கும் ஏற்ற வகையில், நிதிக் கல்விப் பாடங்களின் கருத்துக்கள் தனிப்பட்ட முறையில் வடிவமைக்கப்பட வேண்டும்."

விவசாயிகள், சிறு தொழிலதிபர்கள், பள்ளி குழந்தைகள், சுய உதவிக்குழுக்கள் மற்றும் மூத்த குடிமக்கள் ஆகிய ஐந்து வெவ்வேறு இலக்குக் குழுக்களுக்கு ஏற்ற வகையில் நிதியியல்கல்விப் பாடத்தை இந்திய ரிசர்வ் வங்கியின் நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத்துறை தனித்தனியே வடிவமைத்துத் தந்துள்ளது. நிதியியல் கல்வி சார்ந்து தனித்தனியே வடிவமைக்கப்பட்ட ஐந்து புத்தகங்களின் வரிசையில் இந்த புத்தகம் ஒன்றாகும்.

## பொறுப்புத் துறப்பு

இந்த புத்தகத்தை வாசிப்பவர் நிதியியல் கல்வி அறிவு பெறவேண்டும் என்கின்ற ஒரு உண்மையான நோக்கத்துடன் படிக்கவும், கற்பிக்கவும் ஏதுவானதாக இந்தப் புத்தகம் உருவாக்கப்பட்டுள்ளது. ஒரு குறிப்பிட்ட நிதியியல் பொருள் / பொருட்கள், அல்லது சேவை / சேவைகள் தொடர்பாக முடிவெடுப்பதில் தாக்கத்தை ஏற்படுத்துவது இதன் நோக்கம் அல்ல.

பதிப்புரிமை
முதல் பதிப்பு - ஏப்ரல் 2018
மூல ஆதாரம் தெரிவிக்கப்படும்பட்சத்தில், இதிலுள்ள கருத்துக்களை எடுத்துக் கையாள அனுமதியளிக்கப்படும்.

எழுதி வெளியிட்டவர்கள் -
நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத் துறை
இந்திய ரிசர்வ் வங்கி
10-வது தளம், மைய அலுவலகக் கட்டிடம்
ஷாஹித் பகத் சிங் மார்க்
கோட்டை
மும்பை

அங்கீகாரங்கள்
வடிவமைப்பு - கௌசிக் ராமச்சந்திரன்

**நிதியியல் சேர்க்கை மற்றும் மேம்பாட்டுத்துறை,**
**இந்திய ரிசர்வ் வங்கி,**
10-வது தளம், மைய அலுவலகக் கட்டிடம், மும்பை, இந்தியா